**கொக்குவில் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம் (கனடா)**
**KOKUVIL HINDU COLLEGE**
**OLD STUDENTS ASSOCIATION (CANADA)**
**2015**

## 9 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்

## பேச்சுப் போட்டி

## எமது கலாச்சாரம்

நாம் தமிழர். எமக்குத் தனிப்பண்பாடு உண்டு. உலகில் பல இன மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் தங்கள் கலாச்சாரத்தைப் பின்பற்றியே வாழ்கிறார்கள். நாமும் எமது கலாச்சாரத்தைப் பின்பற்ற வேண்டும். அப்பொழுதுதான் நாம் தமிழர்களாக மதிக்கப்படுவோம்.

தமிழர்களின் தாய்மொழி பழமையானது. அதேபோன்று தமிழர் கலாச்சாரமும் பழமையானதே. தமிழர்களின் கலாச்சாரம் பல சமயநெறிகளோடு இணைந்தது. மேலை நாட்டவர்கள் கூட எமது கலாச்சாரத்தையும், மொழியையும் பாராட்டுகிறார்கள்.

எமது கலாச்சாரம் வளர பெற்றோர்கள் வழிகாட்ட வேண்டும். தமிழில் உள்ள நீதிநூல்களையும், இலக்கியங்களையும் படிக்க வழிகாட்ட வேண்டும். எமது உணவு, உடை என்பவற்றைப் பேணிக் கைக்கொள்ள வேண்டும். சமய விழாக்களைக் கொண்டாடப் பழகவேண்டும். கலாச்சார நிகழ்வுகளைப் பார்க்கச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். சிறுவர்களாகிய எமக்குப் பெற்றோரே மொழியையும், கலாச்சாரத்தையும் பேண வழிகாட்ட வேண்டும். நல்ல வழிகாட்டல்கள் மூலமே நாளைய தமிழ்ச் சமுதாயத்தைப் பாதுகாக்க முடியும். இவ்வகையில் வாழுவோமாயின் எமது கலாச்சாரம் விளங்கத் தமிழர்களாக நாம் வாழமுடியும்.

*********